

# மகளிர் தின வாழ்த்து!

## 08-03-2024

அன்னையாய் நிறைகையில் அன்பின் வடிவாம்!
அணைத்து மகிழ்கையில் தமக்கையாய் நிறைவாள்!
நினைத்துப் பார்க்கும் நேரிய நட்பில் தங்கையவளே!
வாஞ்சையாய் தலைகோதி வயிறு நிரப்பும் சித்தி!

கண்டவுடன் மகிழ்ந்து கதை கேட்கும் பெரியம்மா!
வெட்கம் கலந்து அன்பைக் காட்டும் அத்தைமார்கள்!
பிள்ளை, பெண்ணாய் பெருமை சூடும் பாட்டிமார்கள்!
பணித்துநம்மிடம் பலவும் சொல்வாள் பெயர்த்தி!

இனிய வாழ்வில் ஒவ்வொரு நிலையிலும் நம்முடன்
இணைந்து நடக்கும் அவள்தான் இல்லக்கிழத்தி!
வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் ஒன்றாய் நிறைந்து,
இன்பம் சூட்டி இணைந்து நடக்குமாம் பெண்மை!

இனிய வாழ்வின் மகுடம் அதுவே யாகுமன்றோ!

**அனைவருக்கும் அன்பான மகளிர் தின வாழ்த்துக்கள்!**

**- கவிவளவன்**



